( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

DVC . No. 13/2023

Name : Nancy **P.W.**1
Father/Husband Name : அருண்குமார்
Caste :
Calling :
Religion :
Age :
Date : 29-08-2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.08.2024

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி– சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.**

1. என்னுடைய பிராமாண வாக்குமூலத்தில் பத்தி 3 எதிர் மனுதாரருக்கு வரதட்சணையாக வெள்ளி பொருட்கள் கொடுத்ததாக குறிப்பிட்டதில் எவ்வளவு கொடுத்தோம் என்றால் பணமாக தான் கொடுத்தோம். பிராமாண வாக்குமூலத்தில் பணமாக கொடுத்தோம் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லியுள்ளேன். வீட்டு உபயோக பொருட்கள் கொடுத்தாக சொல்லியதில் அதன் மதிப்பு என்ன என்றால் ரூ. 2 லட்சம் இருக்கும். பிராமாண வாக்குமூலத்தில் ரூ2 லட்சம் மதிப்பில் உள்ள வீட்டின் உபயோக பொருட்கள் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன். பொருட்களாக வாங்கி சீர் வரிசையாக கொடுத்தோம் என்றால் ஏசி இன்வெட்டர் வாங்கி கொடுத்தோம் Scooty க்கு பணமாக கொடுத்தோம்.

2. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் மேற்குறிப்பிட்டுள்ள வீட்டு பொருட்களை வாங்கி கொடுத்த விவரங்களை குறிப்பிட்டுள்ளேனா என்றால் மொத்தமாக சொல்லியுள்ளேன் தனியாக குறிப்பிடவில்லை. கடந்த 2019 ஜனவரி மாதம் 3 ஆம் தேதி எதிர் மனுதாரர் அஸ்தினாபுரம் காயலம்பேட்டையில் சுமார் ரூ.30 லட்சம் மதிப்பு உடைய நிலத்தை ஆவண எண். 33/2019 படி எனக்கு அன்பளிப்பாக்க கொடுத்தார் என்று சொன்னால் வாங்கும் போது அதன் மதிப்பு 8 1/2 லட்சம் தான். நானும் எதிர் மனுதாரும் சேர்ந்து தான் வாங்கினோம். 2015 வருடம் கேளம்பாக்கத்தை சேர்ந்த முத்து என்பவர் எனக்கு பயக்கமாகி என்னை

அலுவலகத்திற்கு அழைத்து சென்று வருவார் என்றால் எனக்கு அவரை தெரியும் ஆனால் அலுவலகத்திற்கு அழைத்து வரமாட்டார். எதிர் மனுதாதார் அலுவலகத்தில் வேலை செய்யும் போது 2015 ல் எனக்கும் முத்து என்பவருக்கும் ரயில் நிலையத்தில் சண்டை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

3. நான் முத்து என்பவரை 2 வருடமாக காதலித்து அவரை வேண்டாம் என்று ஒதுக்கும் சமயத்தில் தான் எனக்கும் முத்துவுக்கும் சண்டை வந்தது அப்போது அலுவலகத்தில் இருந்தவர்கள் ஒதுக்கி வைத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 01/08/2024 அன்று நான் எதிர் மனுதாரருக்கு குழந்தைகள் பள்ளி செலவை செலுத்த Whatsapp மூலம் அனுப்பிய தகவலின் அடிப்படையில் எதிர் மனுதாரர் பள்ளி கட்டணத்தை செலுத்தினார் என்று சொன்னால் சரிதான். அவர் தந்தை என்ற அடிப்படையில் கட்டணத்தை செலுத்தினார்.செய்யூர் காவல் நிலையத்தில் சங்கர் என்பவர் என் மீதும் என் பெற்றோர் மற்றும் சகோதரர் மீதும் கொடுத்த புகார் சமயத்தில் எதிர் மனுதாரர் தான் அனைத்து செலவுகளையும் பார்த்து கொண்டார் என்றால் அவர் உடன் இருந்தார் எந்த செலவும் செய்யவில்லை.

4. 11/09/2022 அன்று வீட்டில் இருந்த எனக்கு வழங்கப்பட்ட சீர் வரிசை பொருட்களை நானும் எனது பெற்றோரும் சேர்ந்து வேறு வீட்டிற்கு எடுத்து சொன்று விட்டோம் என்றால் சரிதான். நான் நிறுவனத்தில் பணி புரியும் போது எதிர் மனுதாரர் வேறு பெண்களுடன் தவறாக நடந்து கொண்டதாக கூடுவாஞ்சேரி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டாதா என்றால் ஆமாம். யார் புகார் கொடுத்தார்கள் என்றால் விஜயலட்சுமி என்பவர் புகார் கொடுத்ததார் முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விஜயலட்சுமி என்பவர் புகார் கொடுத்ததார் என்று அவருடைய பெயரை என்னுடைய பிராமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் விஜயலட்சுமி புகார் கொடுத்ததாக சொன்னதால் அவரை சாட்சியாக விசாரிக்கக இயலுமா என்றால் அவர் எங்கு உள்ளார் என்று எனக்கு தெரியாது.என்னுடைய

இரண்டாவது மகள் 23/09/2020 அன்று பிறந்தாள்.குழந்தையின் பெயர் ஸ்டேசி @ சனா. ம.சா.ஆ 4 ஆவணத்தில் குழந்தை பெயர் மற்றும் தந்தை பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தந்தையின் பெயர் குறிப்பிடப்பட்டள்ளது குழந்தை பெயர் குறிப்பிடப்படவில்லை.

5. குழந்தையின் பெயரை முனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் மனு தாக்கல் செய்த சமயத்தில் பிறப்பு சான்றதழ் வாங்கவில்லை வீட்டில் சனா என்று தான் அழைப்போம். ஸ்டேசி என்ற குழந்தையின் பெயர் எனக்கு தெரியாது என்று சொன்னால் ஸ்டேசி என்று நான் தான் பெயர் வைத்தேன். ஸ்டேசி என்ற பெயர் எனக்கு தெரியாது என்று சொன்னால் முதலில் சனா என்று சொல்லும்போது முதல் குழந்தையின் பெயருடன் ஒத்து வரவில்லை என்பதால் பிறப்பு சான்றிதழ் பதிவு செய்யும் போது ஸ்டேசி என்று பதிவு செய்தேன்.

எதிர் மனுதாரர் வழக்கறிஞர் கேட்டு கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-N.Anupriya, 29.08.2024

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

DM cum JM/TPR.